

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவுநாள் கூட்டத்தில் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் பல்கலைக்கழக துணைவேந்தர் க.ரவி பேராசிரியர்கள் சேகர், கிருஷ்ணமூர்த்தி , நா.அருணாசலம் ஆகியோர் உள்ளார்கள்.


விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத் தேர்தலை முன்னிட்டு மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட தும்பூர் ஊராட்சி பகுதிகளில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் விருதுநகர் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் ராஜகுரு, சிறுபான்மை நலவாரிய துணைத் தலைவர் ராசா அருண்மொழி.வெம்பக்கோட்டை ஒன்றியச் செயலாளர்கள் கிருஷ்ணகுமார், ஜெய பாண்டியன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### என்.கௌதமன் தலைமை! வேதாரண்யம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# உதயம் வே.முருகையன் இல்லத் திருமண விழா! அமைச்சர் எஸ்.ரகுபதி நடத்தி வைக்கிறார்!

### அமைச்சர்கள் சிவ.வீ.மெய்யநாதன் - டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பு!

நாகை , ஜூலை 8-

நாகை மாவட்டம் வேதாரண்யம் மருதூர் தெற்கு பூவதேவன்காடுவை சேர்ந்த வேதாரண்யம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் உதயம் வே. முருகையன் மாரிமுத்துமுருகையன் இணையர்களின் மகன் மு.அரசுக்கும், ஆயக்கரன்புலம் 1ம் சேத்தி வடக்கு குத்தகை ந.கணேசன் மல்லிகாகணேசன் இணையர்களின் மகள் க.ஆர்த்திக்கும் திருமணம் வரும் 10.7.2024 புதன் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறுகிறது. திருமண விழாவிற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்குகிறார். வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவர் மா.மீ.புகழேந்தி வரவேற்புரையாற்றுகிறார். தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, சுற்றுசுழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்தி பேசுகிறார்கள். திருமணத்தை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி பேசுகிறார். திருமண விழாவில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், நாகை நடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வி.ராஜேந்திரன், கழக தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராசன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், சீ.க.மறைமலை, மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன்,மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.சதாசிவம், மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா. மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், சி.சுப்பரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ.பழனி யப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கே.பாண்டியன், இல.பழனியப்பன், கோசி.குமார், உமாசெந்தாமரைசெல்வன், எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் வி.சோழன், மாவட்ட அறங்காவலர் நியனகுழுத் தலைவர் எஸ்.நாகரெத்தினம், உறுப்பினர் கோவி. அன்பழகன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.துரைராஜ், எஸ். வி.டி.அருள், அ.பாரி பாலன், ந.சத்தியமூர்த்தி, பி.என்.கார்த்தி, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, வி.செந்தில், எஸ்.பால்ராஜ், ப.உதயக்குமார், இரா.முருகையன், தமயந்தி, எஸ்.புவனேஸ்வரி, இளம்.சுந்தர், ஆர்.ஆர். குலோத்துங்கன், சி.முகுந்தன், கே.எஸ். சாகுல்ஹமீது, மு.தினேஷ்குமார், வெற்றிச்செல்வன், வி.கமல், பி. முருகானந்தம், எஸ்.சந்தோஷ், ஆர்.சுரேந்தர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத்தலைவர் வே.கோ. உதயசூரியன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சித.கருணாநிதி, வே.கோவிந்தசாமி, க.முருகேசன், இரா.தங்கதுரை, சின்னகுமார், அஞ்சாப்பிள்ளை, அசோக்குமார், மா.மீ.அன்பரசு மற்றும் வேதாரண்யம் நகரம், வேதாரண்யம் மேற்கு, கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் ஏராளமானவர்கள் மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை!

கரூர், ஜூலை 8-

கரூர், ரூ.100 கோடி நில மோசடி வழக்கில் தனது பெயரும் சேர்க்கப்படலாம் என கருதி அ.தி.மு.க. முன்னாள் போக்கு வரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர், முன்ஜாமீன் கேட்டு கரூர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை நேற்று கோர்ட்டு தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில், கரூரில் முன்னாள் அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கரின் வீடு மற்றும் அலுவலகங்களில் சிபிசிஐடி போலீசார் சோதனை நடத்தி வருகிறார்கள். விஜயபாஸ்கரின் வீடு, நிறுவனங்கள் என 10 க்கும் மேற்பட்ட இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது. 2 டி.எஸ். பிக்கள், 9 ஆய்வாளர்களை கொண்ட குழு தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளது.

நில அபகரிப்பு வழக்கில் முன்னாள் அதிமுக அமைச்சர் எம்.ஆர் விஜயபாஸ்கர் தேடப்பட்டு வரும் நிலையில், அவருக்கு சொந்தமான இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது. வழக்கு தொடர்பாக எம்.ஆர்.விஜய பாஸ்கரின் ஆதரவாளர்கள் இடங்களில் எற்கனவே சோதனை நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கரின் மனைவி விஜயலட்சுமியிடமும் சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.


நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது. அதன்படி மாநகர இலக்கிய அணி துணைத் தலைவர் நர்மதா திலக் ஏற்பாட்டில் திம்மராஜபுரத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்வு பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை தலைமையில் 5 வது வட்ட செயலாளர் பத்மராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார். நிகழ்வில் அலிஃப் மீரான், இனியன், வேங்கை வெங்கடேஷ், ஸ்டார் முருகன், கேபிள் குமரேசன், பத்மா, சௌந்திரம், மேரி உலகராஜ், பிந்து செய்யது, ஆனி, சித்ரா, சுப்ரித் சுப்பிரமணியன், திலக், சங்கர், ஷெட்டி, வினோத் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கரூரில் அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி!

### மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்

கரூர், ஜூலை 8-

கரூரில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி துவங்கியது. கரூர் மாவட்டத்தில் இதுவரை வழங்கிய அரசு நலத்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் விளக்கினார்.

கரூர் மாநகராட்சி திருவள்ளுவர் மைதானத்தில் தமிழ்நாடு அரசின் இரண்டரை ஆண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் .மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி) .க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி.பிரபாகர், ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கூறிய தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தற்போது வரை தமிழ்நாடு மக்களின் முன்னேற்றத்திற்கான எண்ணற்ற திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்றைய தினம் கரூர், பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சி திருவள்ளுவர் மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் இரண்டரை ஆண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.05.2021 அன்று ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் தற்போது வரை கடந்த மூன்று ஆண்டுகளில் செயல் படுத்தப்பட்ட திட்டங்கள். நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. அதே போன்று வேளாண்மைத் துறை தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்ற இரண்டரை ஆண்டுகளில் கரூர் மாவட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1,000/ வீதம் 1,69,720 இலட்சம் மகளிருக்கு உதவித்தொகையும். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் 705 பள்ளிகளில் பயிலும் 25,474 மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் 7.0093,326 மகளிர் பயணங்கள் மேற்கொண்டுள்ளனர். புதுமைப் பெண்திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1,000/ வீதம் 2.73 இலட்சம் மாணவிகளுக்கு உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 24,468 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சிகளும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் பரிசோதனை செய்யப்பட்டதில் 5 வகையான நோய்கள் கண்டறியப்பட்டு 322.587 நபர்களுக்கு சிகிச்சைகளும், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் மூலம் 5.090 நபர்களுக்கு ரூ. 3.55 கோடி செலவில் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி) க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். கி.பிரபாகர், மாநகராட்சி மேயர் வெ.கவிதா கணேசன் ஆகியோர்பார்வையிட்டனர்.

இவ்விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி. பிரபாகர். மாநகராட்சி மேயர் வெ.கவிதா கணேசன், 2 வது மண்டலக் குழுத் தலைவர் அன்பரசன், 32 வது மாமன்ற உறுப்பினர் வி.நிவேதா. மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு முதல்வரும், கழக தலைவருமான தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை வடக்கு ஒன்றியம், நல்லாப்பாளையம் ஊராட்சி, இருளர்பாளையம், வாக்குச்சாவடி எண் 1 இல்திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் அ.சிவாவிற்கு ஆதரவாக பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, மாதனூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

17ம் ஆண்டு
நினைவு அஞ்சலி

ஜூலை
08
2024



இராம.சிவராமன் B.A., MBA., அவர்கள்
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

திருப்பத்தூர் தொகுதியின் அடித்தளமே
தொண்டர்களின் தலைவனே உங்கள் நினைவு
நாளில் வணங்குகிறோம்.

.... என்றும் உங்கள் நினைவில் வாழும் ....
குடும்பத்தினர்கள்
திருப்பத்தூர் , சிவகங்கை மாவட்டம்